யாழ்ப்பாணம்


# முரசொலி

மக்களின் நாளேடு        விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 196 ஆங்கீரச வைகாசி 28 ( 10 . 06 . 1992 ) புதன்


## ● மண்டைதீவு கடலில் காணாமற்போன மீனவர்கள் நேற்று சடலமாக மீட்பு

கடந்த ஞாயிறு இரவு மண்டைதீவு கடல் பகுதியில் கடற்படையினரின் தாக்குதலின் போது காணாமற் போன இரு மீனவர்களும் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டனர். மரியாம்பிள்ளை மரியநாயகம் (41) என்பவரது சடலம் வெளிச்சக்கட்டை என்ற இடத்தில் பட்டிவலையில் சிக்குண்டு இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. ஐயாத்துரை சின்னவன் என்ற மற்ற மீனவரது சடலம் பேராறு என்ற இடத்தில் மிதந்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. மரியநாயகத்தின் —04 ஆம் பக்கம் பார்க்க

# திருமலையில் ரோந்து அணி மீது அதிரடித்தாக்கு 13 படையினர் பலி

திருகோணமலையில் நேற்றுக்காலை புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஓர் இராணுவ அதிகாரி உட்பட 13 படையினர் பலியாகினர்.

நேற்றுக்காலை 7.10 மணியளவில் மூதூர் மஹிந்தபுர இராணுவ முகாமிலிருந்து அரிப்புச்சந்தி நோக்கி 32 பேர் அடங்கிய இராணுவ ரோந்து அணி ஒன்று சென்றுகொண்டிருந்தது.

அரிப்புப் பகுதியில் வைத்து புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 13 படையினர் ஸ்தலத்திலேயே பலியாகினர்.

பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

## அகதிகள் அனுப்பப்படுவது காலநிலையினால் பாதிப்பு

இலங்கையில் தற்போதைய காலநிலை சீரின்மையினாலேயே அகதிகள் அனுப்பி வைக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதாக தமிழக அரசின் சிறப்பு ஆணையாளர் ராமதாஸ நேற்று தெரிவித்தார்.

காலநிலை சீரானதும் மீண்டும் அகதிகள் விமானம் மூலம் அனுப்பி வைக்கப்படுவர் எனவும் இன்னும் ஆறாயிரம் பேர் திருப்பியனுப்பப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்திலிருந்து இலங்கை அகதிகள் அனுப்பப்படுவது திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்தது நினைவிருக்கலாம்.

## படையினரின் தாக்குதலால் குடும்பங்கள் இடம்பெயர்வு

மணலாறு படைமுகாமிலிருந்தும் படையினர் மேற்கொண்டுவரும் ஷெல், பீரங்கித்தாக்குதல்கள், விமானத் தாக்குதல்களினால் அங்கு வசித்து வந்த ஆயிரக்கணக்கானோர் வசிப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தண்ணீரூற்று, முள்ளியவளையிலிருந்தவர்கள் அகப்பட்ட பொருள்களை எடுத்துக்கொண்டு பிற இடங்களை நோக்கிச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

பீரங்கி, ஷெல் தாக்குதல்களினால் ஏராளமான குடிமனைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இத்தாக்குதலுக்குள் அகப்பட்ட பலர் காயப்பட்டிருக்கலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (07)

## சுதந்திரக்கட்சி நிலையை தமிழர் புரிந்துகொள்வராம்

இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசினால் சமர்ப்பிக்க முடியாவிட்டால் அரசு இராஜினாமா செய்து தேர்தலை எதிர்கொள்ளலாம் எனக் கூறியுள்ளார் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா.

எதிர்க்கட்சிகள் தொடர்பாக அரசு பாராளுமன்றத்தில் நடந்து கொள்வதை ஆட்சேபித்தே சுதந்திரக்கட்சி தற்காலிகமாக பாராளுமன்ற தெரிவுக்குழுவை புறக்கணித்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழர்கள் சுதந்திரக்கட்சியின் நிலைப்பாட்டை புரிந்து கொள்வர் என்றுதான் நம்புவதாகவும் சேனநாயக்கா குறிப்பிட்டார்.

## சிறி பெரும்புதூரில் கொலையுண்ட பீற்றர் பற்றிய மர்மம்

சிறி பெரும்புதூரில் ராஜீவ்காந்தி கொலையுண்ட போது இறந்தவர்களில் டேவிட்பீற்றர் என்பவருமொருவர். அவரது உடலை உறவினர் கொண்டு செல்லாததால் மரகதம் சந்திரசேகரின் பிரசார வாகனத்தில் கட்சிக்காரர்களே எடுத்துச் சென்று அடக்கம் செய்தனர். இவரது மரணத்துக்காக அரசு வழங்குவதாக அறிவித்த நட்டஈட்டை ஒருவருமே பெறவில்லை.

தரகராக இருந்த பீற்றர் மரகதம் சந்திரசேகரின் மகன் லலித் சந்திரசேகரின் நண்பரெனக் கூறப்படுகிறது. சென்னையில் வேலை பார்த்த பீற்றரின் மனைவி அமெரிக்காவுக்கு ஓடிமறைந்துவிட்டாராம். வங்கியில்வேலை செய்த பீற்றரின் தங்கை கூட வெளிநாட்டுக்கு தப்பி ஓடிவிட்டாராம். இவை பற்றி ஏன் விசாரணை நடாத்தப்படவில்லையென அரசியல் வட்டாரங்களில் கேள்வி எழுப்பப்படுகிறதாம்.

## மன்னாரில் அதிரடி 4 படையினர் பலி!

மன்னாரில் நேற்றுக்காலை படைரோந்து அணி மீது புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 4 படையினர் பலியாகினர்.

நேற்றுக்காலை 7 மணியளவில் சிறுநாவற்குளம் முகாமிலிருந்து முருங்கன் வீதி வழியாக 25 பேரடங்கிய இராணுவ ரோந்து அணி ஒன்று முன்னேறி வந்தது.

முகாமிலிருந்து 150 யார் தூரத்தில் வைத்து இப்படையினர் மீது புலிகள் ஐந்து நிமிட அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர், 4 படையினர் பலியாகினர்.

## குமிழமுனை நோக்கி சென்ற படையினர் அலம்பிலுக்கு திருப்பம்

மணலாறில் அலம்பில் பகுதியிலிருந்து குமிழமுனை நோக்கிய தமது முன்னேறும் முயற்சியை படையினர் கைவிட்டுள்ளனர்.

படையினர் மீண்டும் அலம்பிலுக்கு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அலம்பிலில் இருந்து குமிழமுனைக்கு முன்னேறிய படையினரை தங்கபுரத்தில் புலிகள் வழிமறித்து கடும் தாக்குதல் நடத்தி படையினரை அப்பகுதியில் தடுத்து நிறுத்தியிருந்தமை தெரிந்ததே.

## சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி

சபாநாயகர் எம். எச். மொகமட் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று பாராளுமன்றத்தில் ஐம்பது வாக்குகளால் தோல்வியடைந்தது.

பிரேரணைக்கு ஆதரவாக 68 வாக்குகளும் எதிராக 118 வாக்குகளும் கிடைத்தன.

இப்பிரேரணைக்கு ஆதரவாக சுதந்திரக்கட்சி மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோஷலிச முன்னணி, சில தமிழர் விடுதலைக்கூட்டணியும் வாக்களித்தன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ ஐக்கிய தேசியகட்சி, ஜவேக்கை உறுப்பினர்கள், சில தமிழர் விடுதலைக் கூட்டணியும் எதிராக வாக்களித்தன.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்திலும் சபாநாயகருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

## கொள்ளைக்காரிக்கு டில்லியில் 753வாக்குகள்

இந்திய இடைத்தேர்தலில் டில்லித் தொகுதியில் போட்டியிட்ட முன்னாள் பிரபல கொள்ளைக்காரி பூலன்தேவி படுதோல்வியடைந்து தமது கட்டுப்பணத்தையும் இழந்துள்ளார்.

பகுஜன் சமாஜ்கட்சி வேட்பாளரான பூலன்தேவி 753 வாக்குகளையே பெற்றார். இவருடன் மேலும் 122 வேட்பாளர்கள் டில்லி தொகுதியில் போட்டியிட்டு தமது தேர்தல் கட்டுப்பணத்தையும் இழந்தனர்.

## நேற்றும் ஒரு குழந்தை காய்ச்சலால் மரணம்

யாழ் பெரியாஸ்பத்திரியில் குழந்தைகள் சிகிச்சை விடுதியில் காய்ச்சல், சளி, சுரம் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த குழந்தை ஒன்று நேற்று மரணமானது.

பண்டத்தரிப்பு சாந்தை என்ற இடத்தைச் சேர்ந்த செல்வி கையினா பாலகிருஷ்ணன் என்ற பத்துமாதப்பெண் குழந்தையே மரணமானது.

ஒரு வாரத்தில் மட்டும் நோய் காரணமாக மூன்று குழந்தைகள் மரணமானதாக தெரியவருகிறது. (07)

## வடபகுதியில் ஊரடங்கு

வடபகுதியில் வவுனியா, மன்னார், யாழ்ப்பாண மாவட்டங்களில் இராணுவ கட்டுப்பாடு பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இன்று காலை 8 மணிமுதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுவதாக கட்டுப்படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

## 110 படையினர் பலியாம்

கடந்த மே 28ஆம் திகதி முதல் நேற்றுவரையில் 110 படையினர் பலியானதாகவும் பலர் காயமடைந்ததாகவும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# புலிகள் கடிதமூலம் அழைத்தால் பேசத் தயார் என்கிறார் தொண்டா!

இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாகப் பேசுவதற்கு விடுதலைப்புலிகள் இலக்கம் கடித மூலம் அழைப்பு விடுத்தால் தான் அதை ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இத்தகவலை கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்று வெளியிட்டுள்ளது.

அமைச்சர் தொண்டமான் இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு கடிதமூலம் தொடர்பு கொண்டிருந்ததும் தெற்கில் எழுந்த எதிர்ப்பினால் பின்னர் அம்முயற்சி தேக்க நிலையை அடைந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஓய்வூதியம் வழங்கப்படுகிறது

யாழ் ஹட்டன் நஷனல் வங்கியின் மூலம் ஓய்வூதியம் பெற்று வந்த இலங்கை மற்றும் புகையிரதப்பகுதி ஓய்வூதியக்காரர்களுக்குரிய மேமாத ஓய்வூதிய கொடுப்பனவு அவ்வங்கியினால் தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது.

## கிராமசேவையாளர் பதவிக்கு பெண்களும் விண்ணப்பம்

இம்மாதம் 13 ஆம் திகதி நாடு முழுவதும் நடைபெறவுள்ள கிராமசேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு பெண் விண்ணப்பதாரிகளும் தோற்றவுள்ளனர்.

இப்பரீட்சைக்கு நாடு முழுவதிலுமிருந்து மொத்தம் 68 ஆயிரம் போட்டியாளர்கள் தோற்றுகின்றனர்.

## சீமெந்து ஊழியர்க்கு மூன்றில் ஒரு பங்கு சம்பளம்

காங்கேசன் சீமெந்து லிமிட்டெட்டைச் சேர்ந்த ஊழியர்களுக்கு 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரையிலான காலப் பகுதிக்கு மூன்றில் ஒரு பங்கு சம்பளம் வழங்கப்படவுள்ளது.

தொழிற் திணைக்களம் இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

## வடபகுதி இளைஞர் கொழும்பில் கைது

வடபகுதியைச் சேர்ந்த தளையசிங்கம் மோகனராஜா என்ற இளைஞர் கடந்த வெள்ளிக்கிழமை செட்டியார் தெருவிலுள்ள உணவு விடுதியொன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டதாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலுள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய முகாம்கள் பற்றிய தகவல்கள் தமக்குக் கிடைத்திருப்பதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்ததாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## குடியேற்ற வாசிகள் மீது சிங்கப்பூர் நாட்டம்!

தொழிலாளர் பற்றாக்குறையை எதிர்நோக்கியிருக்கும் சிங்கப்பூர் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த குடியேற்ற வாசிகள் கூடுதலாக அங்கு வந்து குடியேறுவதை விரும்புவதாக சிங்கப்பூர் பிரதிப் பிரதமர் லீஸியன் லூங் தெரிவித்துள்ளார்.

"தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த தொழில்சார் உத்தியோகத்தர்கள் எமக்குத் தேவை. அவர்கள் விரும்பினால் சிங்கப்பூரில் குடியேறலாம்" என்றும் அவர் கூறினார்.

## முல்லை காட்டுப் பகுதியில் கடும் விமானக் குண்டுவீச்சு!

முல்லைத்தீவுப் பகுதியில் இடம்பெற்று வரும் மோதல்களையடுத்து தண்ணீரூற்றுப் பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை முல்லைத்தீவு - அலம்பிலுக்கு தென்மேற்குப் புறமாகவுள்ள காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் கடும் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குமுழமுனை, ஆண்டாங்குளம் பகுதியில் கடும் மோதல் தொடர்ந்ததாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீவுப்பகுதிக்கு திடீர் விஜயம்

பதில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்க, கூட்டுப்படைகளின் தளபதி ஹமில்டன் வணசிங்க ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தீவுப்பகுதிக்கு திடீர் விஜயம் மேற்கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

அங்குள்ள படை முகாம்களுக்கு விஜயம் செய்த இவர்கள் அன்று மாலையே கொழும்பு திரும்பினர்.

## கொழும்பில் மதிப்பீடு

கொழும்பில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பட்டுள்ள சேதவிவரங்கள் பற்றி துரித மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வெள்ளப் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு துரித நிவாரணம் வழங்குவதற்குத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமுகமாகவே இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறதாம்.

## ஈரான் முதலிடும்

இலங்கையில் வர்த்தக வங்கிளைத் திறப்பதற்கும், கப்பல்களை பழுதுபார்க்கும் நிலையங்களை அமைப்பதற்கும் மற்றும் வர்த்தகத்துறைகளை ஆரம்பிப்பதற்கும் ஈரான் விருப்பம்தெரிவித்துள்ளது.

## மயிலியதற்புலம் ஆலய உற்சவம்

அராலி வடக்கு அருள்மிகு மயிலியதற்புலம் கந்தசுவாமி யார் கோவில் வருடாந்த மகோற்சவம் நேற்று 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெற்று 18ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் 20ஆம் திகதி சனிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

(18)

---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பரிசுத்தினம்

காலம்: 11 06 1992 வியாழக்கிழமை காலை 10 மணி

இடம்: கல்லூரி குமாரசுவாமி மண்டபம்.

பிரதம விருந்தினர் : திரு. க. பரமேஸ்வரன் அவர்கள், பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

பரிசில் வழங்கல் : திருமதி ஜெயமலர் பரமேஸ்வரன் அவர்கள்

பெற்றோர், பழைய மாணவர், முன்னாள் ஆசிரியர் நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.)

யா. இ. க | அதிபர், ஆசிரியர், மாணவர்
09. 06. 1992. | 06024

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 5 — 3 — 1956



மறைவு: 11 — 5 — 1992

### திரு. வே. சித்திவிநாயகம்

(வடகீழ் மாகாணசபை பொறியியலாளர்)
(ROCK ENGINEER) (கிளிநொச்சி)

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு பல்வேறு வகைகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் மலர் வளையங்கள் சாத்தியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் கோப்பாய் இல்லத்தில் இன்று (10 6 92) இடம் பெற இருக்கும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
கோப்பாய் மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்
06007

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்கிளை, தலைமையகம்

### ஓட்டுனர்

பத்து வருடங்கள் கனரக வாகனம் ஓட்டி அனுபவமுள்ளவர்கள் மாத்திரம் மேற்படி பதவிக்கு தமது விண்ணப்பங்களை 16 06 92க்கு முன் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை 18. 06. 92 முற்பகல் 10. 00 மணிக்கு எமது பணிமனையில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
08. 06 92.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்
06026

---

## யாழ் மாநகரசபை பொது அறிவித்தல்

### யாழ் மாநகரசபைக்கு சொந்தமான சத்திரச்சந்தைப் பகுதிக்குள் சேதமடைந்த கடைகளுக்கான இட ஒதுக்கீடு

தற்போது சத்திரச் சந்தைப் பகுதிக்குள் மாநகர சபையினால் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கடைகள் ஏற்கனவே இப்பகுதியில் கடை வைத்திருந்து சேதமாக்கப்பட்டதன் காரணமாக கடையை இழந்த மாநகரசபையின் அனுமதிபெற்ற வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு கொடுபடவுள்ளது இவ்வாறு உரிமை கோரும் விண்ணப்பகாரர் தாம் அனுமதி பெற்ற யாழ் மாநகரசபை வாடகைக்குடியிருப்பாளர் என்பதனை நிரூபிக்கும் வகையில் உரிய ஆவணங்கள், அடையாள அட்டை ஆகியவற்றுடன் 16 - 6 - 92 செவ்வாய்க்கிழமை மு.ப 10 00 மணிக்கு மின்சார நிலைய வளவிலுள்ள மாநகரசபை உப அலுவலகத்திற்கு தவறாது வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1992 - 06 - 09

மாநகர ஆணையாளர்,
யாழ். மாநகரசபை
06025

யாழ்ப்பாணம்

# ஆப்கானின்கிளர்ச்சிக்குழுக்களின் தொகுப்பு

1992 ஏப்ரல் 28 ஆம் திகதி ஆப்கானிஸ்தானில் பேராசிரியர் சிப்கத்துல்லா மொஜாதித்தி தலைமையில் ஓர் இடைக்கால முஜாஹிதீன் அரசு நிறுவப்பட்டபோதும் தலைநகர் காபூலில் தொடர்ந்து போட்டிக் குழுக்களுக்கு இடையே மோதல்கள் இடம்பெறுகின்றன. இதனால் நஜிபுல்லா தலைமையிலான கம்யூனிச சார்பு ஆட்சி கவிழ்க்கப்பட்டபோதும் ஆப்கானிஸ்தானில் ஒரு நிலையான அரசு ஏற்படவில்லை. இதற்குக் காரணம் பாகிஸ்தான், ஈரான், அமெரிக்கா, சவூதி அரேபியா ஆகிய நாடுகளால் ஆதரிக்கப்பட்ட பல போட்டிக் குழுக்களின் ஒற்றுமையின்மையே. ஆப்கானிஸ்தானில் செயற்படும் முக்கிய கிளர்ச்சிக் குழுக்களின் விபரங்கள் தரப்படுகிறது. இவைகளின் தலைமையகங்கள் பாகிஸ்தானிலும் ஈரானிலும் உள்ளன.

(அ) இஸ்லாமிய சமுதாயம் (Islamic Society) (ஆப்கானிஸ்தான் ஜமாதே இஸ்லாமி) ஆப்கானிஸ்தானின் வடபகுதியை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது அகமட் ஷா மசூத் உட்பட பல சக்திவாய்ந்த கிளர்ச்சித் தலைவர்களை கடந்த 13 வருட காலத்தில் உருவாக்கியது

(ஆ) இஸ்லாமிக் கட்சி - ஹிஸ்பி இஸ்லாமி இஸ்லாமியக் கடும் போக்காளர் குல்புதீன் ஹெக்மத்தியார் தலைமையிலான சிறமையான அமைப்பையும் ஆயுத பலத்தையும் கொண்ட குழு எனக் கருதப்படுகிறது. அதிகளவு அமெரிக்க உதவியையும் இக்குழுவே பெற்றது இதிலிருந்து பிரிந்த ஒரு பகுதி கிழக்கு ஆப்கானிஸ்தானில் செயற்படுகிறது

(இ) இஸ்லாமிக் ஐக்கியம்—இத்தஹாட்-இ-இஸ்லாமி சர்வதேச தீவிரவாத இயக்கமான முஸ்லிம் சகோதரத்துவத்துக்கு நெருக்கமானது. அதிகளவு சவூதி அரேபியாவினால் நிதி உதவி வழங்கப்படும் அமைப்பு-தவ நிலையில் குறிப்பிடத்தக்க அளவு பலம் கொண்டது அல்ல.

(ஈ) இஸ்லாமிய புரட்சி இயக்கம்: முஸ்லிம் மதகுரு மௌலவி நபி மொகம்மதின் தலைமையிலானது.

(உ) தேசிய இஸ்லாமிய முன்னணி: சுபி இஸ்லாமிக் பிரிவின் ஆன்மீகத் தலைவர் செய்யத் அகமத் கெய்லானி தலைமையிலானது ஆப்கானிஸ்தானின் அரச குடும்பத்துடன் தொடர்புடையது.

(ஊ) ஆப்கான் தேசிய விடுதலை முன்னணி: தற்போதைய இடைக்கால அரசுத் தலைவர் பேராசிரியர் சிப்கத்துல்லா மொஜாதித்தி தலைமையிலானது-இது மிகவும் சிறிய குழுவாகும்.

(எ) ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய கூட்டணிச் சபை: ஈரானிலிருந்து இயங்கும் எட்டு சர்த்துப்படைக் குழுக்களின் கூட்டணி இவை அநேகமாக சிறுபான்மை சியாத் இனத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டது, ஈரானால் அதிகம் நிதி உதவி வழங்கப்படும் அமைப்புச் செயற்பாடு மேற்கு மற்றும் மத்திய ஆப்கானிஸ்தானுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது

(ஏ) ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய இயக்கம்: மற்றும் குரு ஜெமியதாபக-இ-இஸ்லாமி: பாகிஸ்தானிலிருந்து செயற்படும் இரண்டு பெரிய பிரிவினரைக்கொண்ட இரண்டு சிறிய குழுக்கள்.

# அ.தி.மு.க-காங்கிரஸ் உறவு நீடிக்கக்கூடாது

**- காங்கிரஸ் எம். பி.**

'ராஜீவ்காந்தியின் மரணத்தின் மூலம், அவரது பிணத்தின் மீது நின்று வோட்டுக்கேட்டு ஜெயித்துவிட்டு இப்போது அவரது கை - அவுட் வைக்கக்கூட அனுமதி தர மறுக்கிறார்கள் முடிந்தால் இவர்களின் மந்திரிசபை இராஜினாமாச் செய்யட்டும் மறுபடியும் இவர்களால் ஜெயிக்க முடியுமா? ஆனால் என்னால் தனியாக 'கை' சின்னத்தில் நின்று ஜெயிக்க முடியும்" என்று தமிழக வார இதழொன்றுக்கு பேட்டியளிக்கையில் ஆவேசமாக கூறினார் காங்கிரஸ் எம், பி' யான குப்புசாமி,

காங்கிரஸின் கூட்டணிக் கட்சியையே இப்படி விமர்சனம் செய்கிறீர்களே உங்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மாட்டார்களா? என்று கேட்டபோது மிகவும் காட்டமாகவே குப்புசாமி பதிலளித்தார்:

"எதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள்? கூட்டணி என்றால் அர்த்தம் என்ன? தப்பு பண்ணினால் அதற்கும் கூட்டணியா? தேர்தலுக்கு மட்டும்தான் கூட்டணி,

(கோவை விமான நிலையத் திறப்பு) விழா முடிந்ததும் கோவை பொலிஸ் கமிஷனர் முன்னாலேயே என்னைத் தாக்கினார்கள் இதுதான் கூட்டணியா?"

"நேற்று அரசியலுக்கு வந்த எம் எல். ஏக்கள் ஆளவர்களெல்லாம் கணக்கில்லாமல் பணம் சம்பாதிக்கிறார்கள். என் மனைவி ஒரு ஆசிரியை இப்போதும் நடந்து தான் வேலைக்குப் போகிறாள்"

"விழாவில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக இதுவரைக்கும் எனக்கு ஏழுநூறுக்கும் மேற்பட்ட போன் கால்கள் வந்திருக்கின்றன. ஒருவர் கூட நீங்கள் செய்தது தவறு என்று குறிப்பிடவில்லை"

'சுருக்கமாகச் சொன்னால் காங்கிரஸுக்கு என்று ஒரு தனித்தன்மை வேண்டும்... நல்ல தலைமை வேண்டும்... தமிழ் நாட்டிலும் காங்கிரஸ தனித்து நின்றால் நிச்சயம் வெற்றி பெறும் ஆதலால் இந்தக் கூட்டணி தேவையில்லை. இதைச் சொல்ல எனக்குப் பயமில்லை" என்று கூறினார்.

"அ. தி. மு. க- காங்கிரஸ உறவு இனியும் நீடிக்கக் கூடாது. விழாவில் நடந்த அசம்பாவிதங்கள் பற்றி பிரதமரிடம் புகார் கூறுவேன்" என்றும் குப்புசாமி தெரிவித்தார்.

★ வடக்கு கிழக்கு அகதிகளுக்கு

# கொழும்பு முகாம்களில் இனி அனுமதி இல்லை

வடகிழக்கு அகதிகள் கொழும்பில் இயங்கி வரும் அகதி முகாம்களில் இனிமேல் அனுமதிக்கப்படமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி சோமிக் பியங்க பிரதேசம் ஆகியவற்றில் இயங்கிவரும் முகாம்களில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டவர்களைத் தவிர இந்த முகாம்களுக்கு வடக்கு கிழக்குப் பகுதியைச் சேர்ந்த புதியவர்கள் இனிமேல் அனுமதிக்கப்படமாட்டார்களெனவும் சமூக சேவைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு கிழக்கும் பிரசைகளைகளால் புதிதாக அகதிகளானோர் தத்தமது பகுதிகளிலுள்ள முகாம்களுக்கே இனிமேல் செல்லுதல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மின்மாற்றி வெடித்து பெண்பலி! வீடுகள் தீக்கிரை!!

மட்டக்களப்பு மயிலம்பாவெளி பகுதியில் மின் மாற்றி ஒன்று வெடித்துச் சேதமானதை அடுத்து அப் பகுதியிலிருந்த நான்கு வீடுகள் தீக்கிரையானதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இச்சம்பவம் நிகழ்ந்தது. இந்தச் சம்பவம் நிகழ்ந்த போது ஏற்பட்ட மின் ஒழுக்கினால் ஒரு பெண் மணி இறந்ததாகவும் அச் செய்தி மேலும் தெரிவிக்கிறது.

## ஐந்து யாழ். இளைஞர்கள் நீர்கொழும்பில் கைது!

நீர்கொழும்புப் பகுதியில் ஐந்து யாழ் இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்,

இவர்கள் ஐவரும் சமீபத்திலேயே யாழ்ப்பாணத்திலிருந்து நீர்கொழும்புக்கு வந்திருந்ததாகவும் நீர்கொழும்பு பொலிஸ்நிலையத்தில் தம்மைப் பதிவு செய்து கொள்ளாது அங்கு தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்புப் பகுதியில் ஏற்கனவே பல வடபகுதி வாலிபர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது,

## முதல்வர் ஜெயலலிதாவுக்கு சிறந்த பெண்மணிக்கான விருது!

பல்வேறு துறைகளிலும் சாதனைகள் புரிந்தமைக்காக வழங்கப்படும் 'கிரோன்மணி' விருது தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு வழங்கப்படவுள்ளது,

சென்ற ஆண்டு இறந்த பெண்மணியாக செல்வி ஜெயலலிதாவைத் தெரிந்தெடுத்து அவருக்கு கிரோன் மணி விருது வழங்க புதுடில்லியிலுள்ள கிரோன் மணி நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இன்று இந்திய உபஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா புதுடில்லியில் வைத்து இவ் விருதினை முதலமைச்சருக்கு வழங்கவுள்ளார்.

முதல்வர் ஜெயலலிதாவுக்கு கடந்த ஆண்டு சென்னை டாக்டர் நடை மருத்துவப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## புத்தி சுவாதீன மற்றவர் பொலிஸாரால் சுட்டுக்கொலை!

தலைமன்னார் பொலிஸ் நிலைய சோதனைச் சாவடியில் பொலிஸாரின் சமிக்ஞையை மீறிச்சென்ற ஒருவர் காவல் கடமையில் நின்ற பொலிஸாரால் சுட்டுக் கொலைப்பட்டதாக பொலிஸ் தலைமைக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் ஒரு புத்திசுவாதீன மற்ற நபர் என பின்னர் தெரியவந்ததாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது

## வி.பி.சிங்கின் அறிவிப்பு!

நடைபெறவுள்ள இந்திய ஜனாதிபதி தேர்தலில் செடுல் வகுப்பு அல்லது செடுல் பழங்குடி பிரதேசத்தைச்சேர்ந்த ஒரு வேட்பாளரை தமது கட்சி நிறுத்தத் தவறினால் லோக் சபாவிலிருந்து தான் இராஜினாமாச் செய்ய போவதாக ஜனதா தளத்தின் தலைவர் வி.பி.சிங் கூறியுள்ளார்.

நாட்டின் மிக உயரிய பதவிக்கு இந்த சமூகங்களைச் சேர்ந்த ஒரு வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவது அந்த சமூகத்தார் மதித்து கௌரவிக்கப்படுகிறார்கள் என்பதற்கான ஒரு அறிகுறியாகவே அமையுமென வி.பி.சிங் தெரிவித்தார்.

## கனடாவிலிருந்து 7 தமிழ்த் தினசரிகள்

கனடாவிலிருந்து தற்பொழுது ஏழு தமிழ்த் தினசரிகள் வெளிவருவதாக தகவலொன்று தெரிவிக்கிறது.

இதைத் தவிர கனடாவிலிருந்து பல தமிழ் வார, மாத சஞ்சிகைகளும் தற்பொழுது வெளியிடப்படுகின்றன, (22)

## ராஜீவ் கொலை வழக்கு; 10 ஆயிரம் பக்கங்களில் குற்றப்பத்திரிகை

ராஜீவ்காந்தி கொலைவழக்குத் தொடர்பாக தற்போது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றப் பத்திரிகை பத்தாயிரம் பக்கங்களைக்கொண்டது.சிறப்புப்புலனாய்வுக் குழுவின் கைவசமுள்ள விவரங்கள் இரண்டு இலட்சம் பக்கங்களில் உள்ளன.

கம்பியூட்டர்கள், கிளோனர்கள், ஆப்டிக்கல் டிஸ்க் போன்ற நவீன கருவிகள் மூலம் தாம் சேகரித்த வாக்குமூலங்கள், ஆவணங்கள் என்பனவற்றை சிறப்புப் புலனாய்வுப் பிரிவினர் பதிவு செய்து பாதுகாத்து வருகின்றனர்.

இந்த 'ஆப்டிக்கல் ஸகேனர்' முறை மூலம் தேவைப்படும் விவரங்களை உடனுக்குடன் பெறக்கூடிய ஏற்பாடு உள்ளதாகக் கூறப்படுகிறது.

## இல்ல விளையாட்டுப் போட்டி

கொத்தமங்கேணி பிலவத்தை அ.மி.த.க.பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் மகேசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

## இன்று ஆங்கிலதினவிழா

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் 1992 ஆம் ஆண்டிற்கான ஆங்கிலத் தினவிழா இன்றுபுதன்கிழமை காலை நடைபெறவுள்ளது. (14)

## வயோதிபர் மரணம்

மோட்டார் சைக்கிள் மோதியதால் படுகாயங்களுடன் யாழ், ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபரொருவர் 18 தினங்களின் பின் மரணமானார்.

சிறுப்பிட்டியைச் சேர்ந்த ஆ.கைலாசபிள்ளை (74) என்னும் வயோதிபரே இவ்வாறு இறந்தவராவார். யாழ். பருத்தித்துறை வீதியில் சிறுப்பிட்டி சந்தியில் இவ் வயோதிபரை மோதிய மோட்டார்சைக்கிள் நிற்காமல் ஓடி மறைந்து விட்டதாம். (14)

## தமிழ்மொழி மூலம் கம்பியூட்டர் பயிற்சி

தமிழ் மொழிமூலமும், சிங்கள மொழி மூலமும் கம்பியூட்டர் பயிற்சியை வழங்குவதற்கான முயற்சியில் கொழும்பிலுள்ள தனியார் நிறுவனமொன்று இறங்கியுள்ளது.

இதுவரை காலமும் ஆங்கில மொழிமூலமே கம்பியூட்டர் பயிற்சி வழங்கப்பட்டுவந்தது.

மரங்கள் அழிந்தால் மழை அருகும்

# சூழல் ஒப்பந்த அமுலுக்கு ஐ.நா. அமைப்பு உருவாகும்

தற்போது பிரேசிலில் நடைபெறும் உலக சூழல் மாநாட்டில் கைச்சாத்தாகும் ஒப்பந்தங்களை நாடுகள் அமுலாக்குவதை கண்காணிக்க ஐ. நா. அமைப்பு ஒன்றை உருவாக்க மாநாட்டுப் பிரதிநிதிகள் நேற்று இணக்கம் தெரிவித்தனர்.

இந்த ஐ. நா. அமைப்பு உலக சூழலின் காவல் அமைப்பாக செயற்படும். இந்த அமைப்பிற்கு ஐ நா. மனித உரிமை ஆணையத்திற்கான அதிகாரங்களை ஒத்த அதிகாரங்கள் இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் தலைமையகம் நியூயோர்க்கில் அமையும்.

# மேலும் 19 பேருக்கு எழுதுவினைஞர் நியமனம்

அமைய எழுதுவினைஞர் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் மேலும் பத்தொன்பதுபேருக்கு நேற்று யாழ் செயலகத்தில் வைத்து நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன.

யாழ், செயலக சமூகசேவைகள் திணைக்களத்துக்கு 11 பேரும், கல்வித்திணைக்களத்துக்கு மூவரும், வீடமைப்பு நிர்மாண திணைக்களத்துக்கு இருவரும், கிறுவர் நன்னடத்தை திணைக்களத்துக்கு மூவரும் நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 12,47

# யாழ்.ஆஸ்பத்திரி தூதுக்குழு கொழும்பு பயணம்

யாழ், பெரியாஸ்பத்திரியில் நீண்டகாலமாக ஏற்பட்டுவரும் பலதரப்பட்ட பிரச்சினைகளை எடுத்துக் கூறுமுகமாக பணிப்பாளர் தலைமையிலான தூதுக்குழு நேற்று கொழும்பு பயணமானது.

இத்தூதுக்குழுவில் பணிப்பாளர், வைத்தியர் ஒருவர், கணக்காளர் உட்பட ஐவர் அடங்குவர்.

கடந்த முறையும் இவ்வாறு கொழும்பு சென்ற தூதுக்குழு யாழ். ஆஸ்பத்திரியின் முக்கிய தேவைகள் குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துக்கூறியும் இன்னமும் ஆஸ்பத்திரியின் தேவைகள் கிடைக்கவில்லை என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. 07

# மேலும் இரண்டு ஹோட்டல் தம்புல்லையில் அமையும்

தம்புல்லை கந்தலமயில் மேலும் இரண்டு ஹோட்டல்கள் அமைக்கத் தான் அனுமதியளிக்கப்போவதாகவும் கந்தலம ஒரு சுற்றுலாச் சொர்க்கம் என்றும் அதை ஒரு சுற்றுலா மையமாகத் தாம் மாற்றப்போவதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சர் செள. தொண்டமான் தெரிவித்தார்.

ஏற்கனவே ஒரு ஹோட்டல் அமைப்பதற்கெதிராக புத்த பிக்குமாரும் வேறுசில அமைப்புகளும் எதிர்ப்புத் தெரிவித்தது பற்றி கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

# குமண கப்பல் திருமலை பயணம் நோயாளர்கள் கொழும்பு செல்வர்

கொழும்பு வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற சென்ற நோயாளர்களை யாழ்ப்பாணம் ஏற்றிவருவதற்காக குமண கப்பல் எதிர்வரும் 14 ஆம் திகதி திருகோணமலைக்கு செல்லவுள்ளது.

இக்கப்பல் பருத்தித்துறையை வந்தடைந்ததும் மீண்டும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாற்பது நோயாளர்களை இங்கிருந்து ஏற்றிக் கொண்டு திருகோணமலைக்கு செல்லும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கப்பலில் பயணமாகும் நோயாளிகள் 16 ஆம் திகதி காலை 6 மணிக்கு தமக்குத் தேவையான மருந்து, குடிநீர், உணவு என்பனவற்றை தவறாது எடுத்துவருமாறு ஆஸ்பத்திரி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# சுதந்திரக்கட்சி ஆட்சியில் எதிர்க்கட்சிக்கு பல உரிமையாம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியின் போது எதிர்க்கட்சியில் இருந்த தநோயக்காவுக்கு 13 மணி நேரம் பேச சபையில் ஒதுக்கப்பட்டது

இவ்வாறு கண்டி மாவட்ட சுதந்திரக்கட்சி எம், பி. லக்ஸ்மன் கிரியெல்ல சபையில் நேற்றுக் கூறினார்

தற்போதைய அரசின் ஆட்சியில் எதிர்க்கட்சியினர் பேசுவதற்கும் அனுமதி வழங்கப்படுவதில்லை

பாராளுமன்றத்திலும் வெளியிலும் ஜனநாயகம் செயற்படுவதில்லை எனவும் அவர் சொன்னார்

## அறிவித்தல்

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவந்த யாழ் பொதுப்பணிமன்றம் தொடர்பாக கொடுக்கல்வாங்கல்கள் ஏதும் இருப்பின் 15-06-92க்கு முன்னர் 83/2, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறது.

10-06-92

நேசன்
நிர்வாகி

06027

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 10-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

★ சித்தியடைந்தவர்கள் அலைகிறார்கள்

# வெற்றிட விவரம் கிடைத்தாலே எழுதுவினைஞர் நியமனங்கள்

அண்மையில் நடைபெற்ற எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு வங்கிகளில் நியமனம் செய்ய வங்கிகள் வெற்றிட விவரங்களை செயலகத்துக்கு அனுப்பவில்லையென செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேபோல வெற்றிடங்கள் உள்ள சில திணைக்களங்களும் அதன் விவரங்களை செயலகத்துக்கு அனுப்பி வைப்பதில் அசட்டையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெற்றிட விவரங்கள் செயலகத்துக்குகிடைத்ததும் சித்தியடைந்தவர்களுக்கு உடன் நியமனம் வழங்கப்படும் எனவும் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேநேரம் பரீட்சையில் சித்தியடைந்த பெண்களும் ஆண்களும் தினமும் செயலகத்துக்கு வந்து அலைவதையும் காணமுடிகிறது (47)

# பனாமா விமான விபத்தில் 47 பயணிகள் பலி!

47 பயணிகளை ஏற்றிச் சென்ற விமானமொன்று கிழக்கு பனாமா மலைப்பகுதியில் விழுந்து நொருங்கியதில் அதில் பயணம் செய்த அனைவரும் கொல்லப்பட்டனர்.

விமான சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கொலம்பியாவுக்குச் சென்று கொண்டிருந்த இந்த விமானம் புயலில் சிக்கி விபத்துக்குள்ளானது.

## மன்னார் வீரச்சாவு

மன்னார் மோதலில் மேஜர் ரவிசங்கர் (யூ. வின்சன் கெனடி மன்னார்) லெப், அரவிந்தன் (வே பிரான்ஸிஸ் சேவியர் கிடந்தல்தீவு) 2ஆம் லெப், உதயசந்திரன் (சே. இராசமணி திருநெல்வேலி) ஆகியபோராளிகள் வீரச்சாவு எய்தினர்.

## மூதூரில் வீரச்சாவு

மூதூரில் நேற்று நடைபெற்ற மோதலில் மேஜர் வெற்றிச்செல்வன் (அ சோமசேகரன் மூதூர்), லெப். மலையமான் (தே செங்கோதரன் சாம்பல்தீவு), 2ம் லெப். மறைமலை (இ அன்ரனி ஆலங்கேணி). 2ம் லெப், மணிமொழி (வ கமலதேவன் திரியாய்), லெப் அறிவநம்பி (உ. ஸ்ரீகாந் திருமலை) லெப். தர்மராஜ் (ஜே. அன்ரனி அலக்ஸாண்டர் திருமலை), திருவருட்செல்வன் (வை சேரகேஸவரன் சாம்பல்தீவு) ஆகிய 7போராளிகள் வீரச்சாவு எய்தினர்

## ராஜேஸ்கன்னா வெற்றி

இந்தியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இடைத்தேர்தலில் டில்லித் தொகுதியில் போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் நடிகர் ராஜேஸ்கன்னா வெற்றி பெற்றுள்ளார்

இவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் நடிகர் சத்ருக்கன் சின்ஹாவை 28 ஆயிரம் அதிகப்படி வாக்குகளால் தோற்கடித்தார்,

## திருமலையிலும் தகர்ப்பு

திருகோணமலையிலும் சில மின்சார ட்ரான்ஸ்போமர்கள் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன,

## தபால்கள் கப்பலிலசெல்லும்

யாழ். குடாநாட்டுத் தபால் பொதிகள் எதிர்வரும் 16ஆம் திகதி பருத்தித்துறையிலிருந்து கொழும்பு செல்லும் குமணகப்பலில் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக தபால் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. 06

காணாமற்...

சடலத்தின் தலைப்பகுதி சிதறியும், உடல் பகுதி தோல் உரித்தும் இருந்தது. சின்னவனின் சடலத்திலும் தோல் உரித்திருந்தது, (7,15, 22)

## மன்னாரில் கைப்பற்றிய ஆயுதங்கள்

மன்னாரில் நேற்று நடைபெற்ற மோதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்,

- ஏ. கே, எல், எம். ஜி, - 01
- ரம் மகஸீன் - 08
- ரி - 56 துப்பாக்கிகள் - 2
- ரி 56 மகஸீன்கள் - 8
- ரி - 81 துப்பாக்கி - 01
- ஐ, எம். ரவை விக்குடன் -671
- ஐ எம், ரவைகள் - 234
- கோல்சர் - 2
- தலைக்கவசம் - 1
- மழைக்கவச உடை - 1
- ஜே. ஆர் குண்டு - 6

## மூதூரில் கைப்பற்றிய ஆயுதங்கள்

மூதூரில் நடைபெற்ற மோதலில் படையினரிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்கள்

- ரி-56 துப்பாக்கிகள் - 09
- ரி 81 துப்பாக்கிகள் - 02
- ரி-56 மகஸீன்கள் - 30
- ரி-81 மகஸீன்கள் - 09
- ஐ எம். ரவைகள் - 1371
- ஏ. கே, கோல்சர்கள் - 10
- ஜே, ஆர். குண்டு - 01
- மிதிவெடி அகற்றி - 01
- உராய்வு நீக்கி தாங்கி - 01
- 5 சோடி சப்பாத்து
- இராணுவ கட்டில் - 06

# மட்டக்களப்பு நகர் பொலிஸால் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு நகரமும் புளியந்தீவு பகுதியும் நேற்று முன்தினம் திடீரென பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது.

இதனால் பீதியடைந்த மக்கள் ஆலயம் ஒன்றில் தஞ்சமடைந்தனர். இங்கும் சில பொதுமக்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ நிலையத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கையினால் மட்டக்களப்பு நகரில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

# 45 கிராமசேவையாளருக்கு எதிராக லஞ்ச வழக்கு

லஞ்சக் குற்றச் சாட்டு சம்பந்தமாக கைது செய்யப்பட்ட கிராம சேவை அதிகாரிகள் நாற்பத்தைந்து பேருக்கெதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு லஞ்ச திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது

கிராமசேவையாளர்களுக்கு எதிராக ஏற்கெனவே உயர் நீதிமன்றத்தில் பதினொரு வழக்குகளும் மஜிஸ்திரேட் நீதிமன்றங்களில் மூன்று வழக்குகளும் நடைபெறுக்கொண்டிருக்கின்றன,

★ சபையில் தினேஷ்

# அரச எம். பிககள் சார்பாக சபாநாயகர் செயற்படுகிறார்

சபாநாயகர் அரசாங்கத் தரப்பு எம், பிக்களுக்கு சார்பாகவே செயற்படுகிறார்.

இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணி எம்பியான தினேஷ் குணவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் சபாநாயகர் எம், எச். மொகமட் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தில் கூறினார்:

பாராளுமன்றத்தின் உள்ளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பேச்சு சுதந்திரம் பறிக்கப்பட சபாநாயகர் வழிவகுக்கிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## நிவாரணம்

மீனவர்களுக்கான நிவாரண விநியோகம் யாழ் உதவி அரச அதிபர் பிரிவு செஞ்சிலுவைச்சங்க கிளையில் தடைப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்

நிவாரணம் பெறுவதற்கு அதிகாரிகளினால் சிபார்சு செய்யப்பட மீனவக் குடும்பங்கள் இங்கு தினமும் அலைந்து திரிவதையும் காண முடிகிறது. 52

## குறைந்தது

தேசிய ஆங்கில ஈராதரப் பத்திரம் என் கி ஈ பரீட்சைக்கு பரீட்சைக் கட்டணம் 125 ரூபா என பரீட்சைத் திணைக்களம் அறிவித்தது

யாழ் நகரிலிருந்து இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கச் சென்ற சிலருக்குத்தபாலதிபர் ஒருவர் தமக்கு 100 ரூபா தான் என் கி ஈ பரீட்சைக் கட்டணம் என சுற்று நிருபம் வந்திருப்பதாகக் கூறி அவர்களுக்கு 100 ரூ பற்றுச் சீட்டு வழங்கியுள்ளார்